**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை

பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையால்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 540,145,707 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீண்டும் பெறுமதியிட்டு மீள்மதிப்பீட்டு பெறுமதியை கணக்குகளில் உள்ளக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் போது அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 5,194,264 கூட்டுத்தொகையான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மற்றும் காலாவதியான இருப்புக்கள் கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவற்றில் தேறிய தேறக்கூடிய பெறுமதி குறைவடைந்து செல்லுமா என நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும் வரை கணக்குக் கூற்றுக்களில் கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் சேவையை விட்டுச் சென்ற சிரேஷ்ட விரிவுரையாளரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 18,540,803 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் உரிய கணக்குகளில் வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் அறவிட வேண்டிய மீதி குறித்த காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 01 வருடம் முதல் 04 வருட காலப் பகுதியில் பல்கலைகழகத்தின் வங்கிக் கணக்கில் இடப்பட்டிருந்த ரூபா 2,799,794 கூட்டுத் தொகையான நேரடி செலவு வைத்தல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமல் நானாவித வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது ரூபா 2,200,854 பெறுமதியுடன் தொகையொன்று 2021 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு உரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பெறுமதியையும் இனங்கண்டு சரியாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்குரிய பரீட்சை வினாப்பத்திர பரிசோதனைக் கட்டணம் ரூபா 1,805,250 தொகை முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது முன்னைய ஆண்டின் சீராக்கமாக வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 இன் செலவினமொன்றாக கருதப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் ஆண்டிற்குரிய சகல செலவினங்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வேலை பூர்த்தி செய்யப்பட்டு பாவனைக்கு எடுக்கப்படுகின்ற | இதில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டம் 2021 ஆம் | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| ரூபா 70,979,225 கூட்டுத் தொகையான கட்டிடங்கள் நடைமுறையல்லா சொத்துக்களின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டமையினால் அப்பெறுமதியால் நடைமுறை வேலைகளும் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கட்டிடங்களுக்குரிய மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதி முறையே ரூபா 4,370,534 மற்றும் ரூபா 6,413,200 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது அவை நடைமுறை வேலைக் கணக்கில் பூர்த்தி செய்யப்பட்ட ஆதனங்கள் சொத்து கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய 12,199,822 தொகையான 49 நானாவித கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 3,782,650 தொகையான 03 வழங்கல் கடன்கொடுத்தோர் மீதிகள் என்பன மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நானாவித கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியம் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.10 ஆம் பிரிவின் | தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதிகளுக்கு இடையே இந்த | தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதிகளை |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பெறப்பட்ட ஆராய்ச்சி முற்பணங்கள் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழக நிதியத்தில் இருந்தும் ஏனைய நிதியங்களில் இருந்தும் 11 விரிவுரையாளர்களினால் பெறப்பட்டிருந்த ரூபா 2,662,233 கூட்டுத்தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 01 வருடம் முதல் 13 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகையையும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 571 | 2012 ஆம் முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,297,392 கூட்டுத் தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் 02 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையான காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 68,157,974 கூட்டுத் தொகையான ஒப்பந்தம் மற்றும் நானாவித நிறுத்தி வைத்தல் பணங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைத்தல்களில் காணப்படுகின்ற பணம் முன்னைய ஆண்டு முதல் உரிய பெறுனர்களிடம் விசாரித்து அவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எஞ்சிய பணத்தையும் எதிர்காலத்தில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | சகல உயர் கல்வி நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகல நபர்களினதும் வருகை மற்றும் வெளிச் செல்கை நேரங்கள் பதியப்பட வேண்டியிருந்த போதிலும், கல்விசார் பதவியணியினர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பல்கலைக்கழக முறைமையில் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற திட்ட முறைமை எமது பல்கலைக் கழகத்திலும் அமுல்படுத்தப்படுகின்றது. | பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 2(ஆ) பந்தி | எந்தவொரு விஷேட பணிக்காகவும் பதவி நிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ரூபா 100,000 ஆகக் கூடியது வரை முற்பணம் வழங்கப்பட முடியுமாக இருந்த போதும், அதற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 106,386 தொகை முதல் ரூபா 150,000 தொகை வரையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | தற்போது முற்பணம் வழங்குதல் ரூபா 100,000 எல்லையின் கீழ் பேணிச் செல்லப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 140,295,545 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 162,043,893 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,748,348 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வெளிவாரி பாடநெறி வருமானம் மற்றும் ஆய்வுகூட வருமானம் ரூபா 16,024,853 இனால் அதிகரித்தமை மற்றும் பிரயாணச் செலவினங்கள் ரூபா 4,515,285 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை ஸ்தாபிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு அதற்காக | பல்கலைக்கழங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் UGC/AC/2018/ENG/13 ஆம் இலக்க 2019.12.24 ஆம் | பொறியியல் பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்குமாயி |

| | | |
|---|---|---|
| பல்கலைக் கழக நிதியத்தில் இருந்து ரூபா 6,120,913 தொகை செலவிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தினால் சம்பிரதாய விடய பாடநெறிக்கு புறம்பாக விஷேட பாடநெறியொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக 2019 திசெம்பர் 24 ஆம் திகதி பல்கலைகழ மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளரினால் பொறியியல் பீடத்தை ஸ்தாபிப்பதற்கு உரிய செயற்திட்ட முன்மொழிவு கைவிடப்பட்டிருந்தது. மேலும், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் IV ஆம் பகுதியின் 21(ஈ) பிரிவின் பிரகாரம் அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பொறியியல் பீடத்தை ஸ்தாபித்தல் தொடர்பான தீர்மானமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பல்கலைக்கழ நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட மேற்கூறப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | திகதிய கடிதத்தின் 06 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் புதிய பொறியியல் பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழகத்தினால் கட்டுப்பாட்டு சபை மற்றும் நிர்வாக சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழு அதற்குரிய கலந்துரையாடல்களை மேற்கொண்டு எதிர்காலத்தில் இக்குழுவினால் வழங்கப்படுகின்ற தீர்மானம் தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ன் செலவிடப்பட்ட செலவினங்களை பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த 07 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் எஞ்சியிருந்த ரூபா 1,018,727 தொகையை மீண்டும் தீர்ப்பதற்கோ அல்லது பல்கலைக்கழக நிதியத்தில் சேர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நிதியம் தொடர்பாக உரிய உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் திருப்பி அனுப்பவதற்கோ அல்லது பல்கலைக்கழத்தின் ஒதுக்க நிதியத்தில் செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பட்டபின் படிப்பு நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடன் விடுமுறை பெற்றுச்சென்ற எனினும் பட்டபின் படிப்பை பூர்த்தி செய்யாதிருந்த 08 விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 35,621,947 தொகையான பிணைமுறி பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பட்டபின் படிப்பு பூர்த்தி செய்வதற்கு குறித்த திகதி வரை செயல் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குமாறு 04 விரிவுரையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு விரிவுரையாளரிடம் இருந்து பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை மற்றும் பிணை முறிகளுக்குரிய மொத்த பிணை முறி பெறுமதியை ஒரு மாதத்தில் அறவிடுவதற்கும், மேலும் ஒரு விரிவுரையாளரிடம் இருந்து ரஜரட்ட பல்கலைக்கழத்தில் காணப்பட்ட 04 ஆம் பிணைமுறி மீறல் மற்றும் மீளாய்வு குழுவின் மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பட்டபின் படிப்பை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தரிடம் இருந்து பிணைமுறி பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டில் சேவையை விட்டுச் சென்ற விரிவுரையாளரிடம் இருந்து ரூபா 411,844 தொகையான பிணைமுறி பணம் மற்றும் முதுமானி பட்டத்தை பயிலுவதற்காக கற்கை விடுமுறை பெற்றுச் சென்று பட்டத்தை பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்த விரிவுரையாளரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 3,784,401 தொகையான பிணைமுறி பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக் கழகத்திற்கு அறவிடுவதற்கு உள்ள ரூபா 411,844 தொகையை அவர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து அறவிடுவதற்கும் விரிவுரையாளர் டபிள்யு.எம்.எஸ். பிரனாந்து அவர்களிடம் இருந்து புதிய பிணை முறியொன்றை கையெப்பமிட்டுக் கொள்வதற்கும் கற்கைகள் நிறுவன பிரிவின் பிரதி பதிவாளருக்கு அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பிணை முறிப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கற்கைகள் பிரிவும், வடமத்திய மாகாண சபையும் இணைந்து அமுல்படுத்திய ''கம'' செயற்திட்டத்தின் தரவுகளை கணனிமயப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் நடவடிக்கைகளுக்காக மாகாண சபையினால் பல்கலைக் கழக நிதியத்தில் செலவு வைக்க வேண்டிய ரூபா 7,108,000 தொகையான பணம் கற்கைகள் பிரிவின் மூன்று உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்தை பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 150,000 தொகையும் உள்ளடங்கியிருந்து. | இது தொடர்பாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்காக கட்டுப்பாட்டு சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகவல்களை அவதானிப்புச் செய்து கட்டுப்பாட்டு சபையின் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக்கழ நிதியத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |